## பொருளடக்கம்:


1. எது நல்ல சகுனம்?
2. எது கெட்ட சகுனம்?
3. காகத்தின் சகுனம் நல்லதா?
4. பரிகாரம் கூறுவதில் சகுனங்களின் பங்கு
5. திருமணம் நடக்கும்போது மழை பெய்வது நல்ல சகுனமா?
6. தேங்காய் உடைத்தலில் இருக்கும் சகுன ரகசியங்கள்
7. பல்லி சொல்லும் பலன்
8. பல்லி விழும் பலன்கள்
9. நாய்களால் ஏற்படும் சகுனங்கள்
10. ஆந்தை சீறலுக்கு ஏற்படும் பலன்கள்
11. கண்கள் துடிப்பின் பலன்கள்


## சகுனம்

- நன்மை, தீமைகளை முன்கூட்டி சொல்லும் அறிகுறிகள் சகுனம் என்பது முன்னோர்களின் கருத்து. சகுனம் என்பது எதிர்பாராமல் நிகழ்வது. அவற்றில் முன்னோர்களின் வரையறைப்படி நல்ல சகுனங்களும், கெட்ட சகுனங்களும் உண்டு.

### நல்ல சகுனங்கள்:

- யானை, குதிரை, பசு, கன்றுடன் கூடிய பசு, காளை, கன்னி, பல் மருத்துவர்கள், இரத்தினம், எரியும் நெருப்பு, தானியம், தயிர்பானை, சந்தனம், பிணம், பூர்ணகும்பம், அட்சதை, வெள்ளை மாலை, குழந்தையுடன் பெண், எள், சலவைத்துணி, தாமரை, ஆடை ஏதும் அணியாத குழந்தை, சங்கு, நெய், பால், வாத்திய ஒலி, மாமிசம் போன்றவைகள் எதிரே வந்தால் நல்ல சகுனங்கள் ஆகும்.
- காலையில் சுமங்கலி பெண்கள் முகத்தில் விழிப்பது நல்லது.
- பயணம் போகும்போது அழுக்கு துணியோடு வரும் வண்ணாரை காண்பது நல்லது.

- காகம் இடப்பக்கமிருந்து வலப்பக்கம் பறந்து செல்வதை பார்த்தால் நல்லது.
- காகம் கரைந்தால் விருந்தினர் வருவர்.
- பல்லி உடலில் விழுந்தால் ஆயுள் கூடும்.
- பல்லி மேற்கு திசையிலிருந்து ஒலி எழுப்பினால் நல்லது நடக்கும்.

## கெட்ட சகுனங்கள்:

- எதிரில் வருபவர் எண்ணெய், மோர், உப்பு, வைக்கோல், எலும்பு, புல், சாம்பல், பஞ்சு, விறகு, வெற்று பாத்திரம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வருதல்
- அலங்கோலமான ஆடைகளுடன் தலையை விரித்துப்போட்டு கொண்டும், அழுது கொண்டும் எதிரில் ஒருவர் வந்தாலோ, வேதம் கற்ற அந்தணர் தன்னந்தனியாக ஒருவராக எதிரில் வருதல்
- பூனை குறுக்கே போதலும், எதிர்ப்படுதலும்.
- நாய் குறுக்கே செல்லுதல்.
- போர் வீரனை காணுதல்.
- நாய் ஊளையிடுவதை கேட்டல்.
- விதவையை காண்பது.
- மண்வெட்டியுடன் எதிரே வருவது
- தும்மல் ஒலி கேட்டல்.
- முக்காடிட்டவரை காண்பது.
- கருடன் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக செல்வது.
- காகம் வலமிருந்து இடமாக செல்வது.
- வெளுத்த துணிகளுடன் வண்ணான் வருதலை காண்பது.
- பாய் விற்பவரை காண்பது.
- அரப்பு விற்பவரை காண்பது.

## காகத்தின் சகுனம் நல்லதா?

- நமது அன்றாட வாழ்வில் தினம் காணும் பறவையாக உள்ள காகத்தை இறந்த நம் முன்னோரின் அம்சமாக கருதுகிறோம்.
- காகம் எந்த உணவையும் தனக்கென்று சேர்க்காமல், பிற காகங்களுக்கும் கொடுத்து பகிர்ந்து உண்ணும் சிறப்பியல்பை கொண்ட பறவையாகும்.

### சகுனங்கள் நல்லதா?

- ஒருவர் யாத்திரைக்கு புறப்படும்போது, காகம் எந்த பொருளை தன் அலகால் கொண்டு வருகிறதோ, அந்த பொருளின் வகையிலான லாபம் பயணத்தில் கிட்டும்.
- ஒருவருடைய பயணத்தின்போது, அவரது வாகனம், குடை, காலணி அல்லது அவருடைய உடல் மற்றும் நிழல் ஆகியவற்றை காகம் தன் சிறகால் தீண்டினால், அகால மரணம் அவருக்கு நேரிடலாம்.
- ஒருவரின் பயணத்தின் போது காகம் வலமிருந்து இடம் போவது தன லாபத்தையும், இடமிருந்து வலம் போனால் அது தன நஷ்டத்தையும் உண்டாக்கும்.
- வெளியில் பயணிக்கும் ஒருவரை நோக்கி காகம் கரைந்து கொண்டே பறந்து வந்தால், அந்த பயணத்தை தவிர்த்து விட வேண்டும்.
- வெளியில் செல்லும்போது, ஆண் மற்றும் பெண் காகங்கள் ஒன்றாக கரைந்து கொண்டிருந்தால், அவர்களின் வீட்டில் பெண்களின் சேர்க்கை ஏற்படும்.
- ஒருவரின் வாகனம், குடை, காலணி ஆகியவற்றின் மீது காகம் எச்சமிட்டால், அவர்களின் பயணத்தின் போது, உணவுக்கு பஞ்சம் இருக்காது.
- ஒரு பெண்ணின் தலையில் ஏந்தியுள்ள குடத்தின் மீது காகம் அமர்ந்திருக்கும் காட்சியை கண்டால், தனலாபம் மற்றும் பெண்களால் பல நன்மை கிடைக்கும். அந்த குடத்தின் மீது காகம் எச்சமிட்டால், நல்ல உணவு கிடைக்கும்.

- ஒருவர் பயணிக்கும்போது ஒரு காகம் மற்றொரு காகத்திற்கு உணவூட்டும் காட்சி தென்பட்டால், அவர்களின் பயணம் இனிதாகும்.
- காகம் நெல் போன்ற தானியங்களை அள்ளிச் சென்று சேமிப்பது பஞ்சம் வரும் என்பதற்கான அறிகுறியாகும்.
- பூஜை செய்வது போல் காகம் பூக்களை கொண்டு மேலே தூவினால், பயணத்தால் பலவிதமான தனலாபம் ஏற்படும்.
- வாகனம், குடை, காலணி ஆகியவற்றின் மீது காகம் எச்சமிட்டால், பயணத்தின்போது உணவுக்கு பஞ்சம் இருக்காது.
- நல்ல மரங்களில் காகம் கூடு கட்டுவது நற்பலனையும், பட்டுப்போன, எரிந்துபோன மரங்களில் கூடு கட்டுவது வரப்போகும் துன்பத்தையும் குறிக்கும்.
- பூக்கள், பழங்கள் அல்லது ரத்தின கற்களை ஒரு வீட்டில் காகம் இட, அந்த வீட்டில் ஆண் குழந்தை பிறக்கும்.
- கூடு கட்ட உபயோகிக்கும் புல், குச்சி போன்றவற்றை ஒரு வீட்டில் காகம் போட்டால் பெண் குழந்தை பிறக்கும்.

## காகம் எந்த திசையில் கரைந்தால் நல்ல சகுனம்?

- தென்மேற்கு திசையை நோக்கி கரைந்தால் குதிரை, தயிர், எண்ணெய், உணவு போன்ற உணவுகள் சேரும்.
- ஒருவருடைய வீட்டின் தென்கிழக்கு திசையை நோக்கி காகம் கரைந்தால் தங்கம் சேரும்.
- வடக்கு திசையை நோக்கி காகம் கரைந்தால் ஆடைகள், நல்ல உணவு மற்றும் வாகனங்கள் ஆகியவை கிடைக்கும்.
- வீட்டின் தெற்கு திசையை நோக்கி கரைந்தால் உளுந்து, கொள்ளு போன்ற தானிய லாபம் கிடைக்கும்.
- மேற்கு திசையை நோக்கி காகம் கரைந்தால் மாமிச உணவு, மது வகைகள், நெல் முதலான தானியங்கள், முத்து, பவளம் போன்று கடலில் விளையும் பொருட்கள், உலர்ந்த பழ வகைகள் கிடைக்கும்.